[திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்][2009 ஜூலை 8

ஆனால் அடிக்கடி கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்யக்கூடிய மழையின் காரணமாக, அதிலும் குறிப்பாக இந்தச் சாலையின் ஒருபுறம் தனியார் இரப்பர் தோட்டமும், இன்னொருபுறம் மலைப்பாங்கான பகுதியாகவும் அமைந்திருப்பதாலும், குறைவான மழை பெய்தால்கூட அந்த மலைக் குன்றுகளிலிருந்து வரக்கூடிய மழை நீர், இந்தச் சாலையைப் பழுது செய்துவிடுகிறது. அதேநேரத்தில் அந்தச் சாலையில் பழுது எற்படாமல், தண்ணீர் தேங்காமல் இருப்பதற்காக, ஏறத்தாழ 1½ கிலோ மீட்டர் நீளத்திற்கு 1.0 மீட்டர் அகலம் கொண்ட மண் வடிகால் வெட்டப்பட்டு, அங்கு அந்தப் பகுதியிலிருக்கக்கூடிய வழியாட்டுமுகாம் ஆற்றில் சேர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் பழுது ஏற்படுகின்ற நேரத்திலெல்லாம் அந்தச் சாலை உடனடியாகப் பழுதுபார்க்கப்பட்டு, போக்குவரத்துக்கு உகந்ததாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற மீதமுள்ள பகுதியை அகலப்படுத்துவதும்—அதேநேரத்திலே கான்கிரீட் வடிகால் அமைத்தால்தான் நிரந்தரத் தீர்வு என்று சொல்லியிருக்கிறார். அவ்வாறு அமைப்பதற்கு ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் தேவைப்படுகிறது. நிதிநிலைமைக்கேற்ப வருகிற காலத்தில் அதுபற்றி அரசு பரிசீலிக்கும். பாக்கியுள்ள சாலைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் சாலைகள் எல்லாம் இந்த நிதியாண்டிலே எடுத்து நல்ல முறையிலே பராமரிக்கப்படும்.

4. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. மு. அப்பாவு, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து மூன்றாவது மற்றும் இருபத்து நான்காவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.